# திருக்குடும்ப தேவாலயம் காஜாங்

*11, JALAN GEREJA, 43000 KAJANG*

**தொலைபேசி எண்** : *03-8733 1154*

**அகப்பக்கம்** :*www.hfckajang.org.my* **மின்அஞ்சல்** :*hfckajang@gmail.com*

*Scan for updates*

பங்கு அருள்பணியாளர் : மைக்கல் சுவா
துணை அருள்பணியாளர் : போனவென்ச்சர் ராயப்பன்
துணை அருள்பணியாளர் : பிலிப் சுவா

கல்லூரி/பல்கலைக்கழக குழு :
சகோ. மார்கிரேட் பெரேய்ரா ஆர்.ஜீ.எஸ்
*pereiramargaret01@yahoo.com*

## பங்கின் திருப்பலி நேரங்கள்

| திகதி | நேரம் | திருப்பலி | குறிப்பு |
|---|---|---|---|
| *04/10/2026* **(ஞாயிறு)** | **காலை 7.00**<br>காலை 9.30<br>காலை 11.30<br>பிற்பகல் 1.30 | **திருப்பலி தமிழ்**<br>திருப்பலி ஆங்கிலம்<br>திருப்பலி சீனம்<br>திருப்பலி மலாய் | பொதுக்காலம் 27ஆம் வாரம் ஞாயிறு |
| *05/09/2026* **(திங்கள்)** | காலை 7.00 | திருப்பலி ஆங்கிலம் | புனித மரியா பவுஸ்தீனா கோவாலஸ்கா |
| *06/09/2026* **(செவ்வாய்)** | காலை 7.00 | திருப்பலி ஆங்கிலம் | புனித புரூனோ மறைப்பணியாளர் |
| *07/09/2026* **(புதன்)** | இரவு 7.30<br>இரவு 8.00 | ஜெபமாலை<br>திருப்பலி ஆங்கிலம் | தூய செபமாலை அன்னை |
| *08/10/2026* **(வியாழன்)** | காலை 7.00 | திருப்பலி ஆங்கிலம் | வார நாட்கள் |
| *09/10/2026* **(வெள்ளி)** | இரவு 8.00 | திருப்பலி ஆங்கிலம் | புனித யோவான் லெயொனார்ட் மறைப்பணியாளர் |
| *10/10/**2026*** **(சனி)** | காலை 7.00<br>மாலை 5.30<br>மாலை 6.00<br>இரவு 7.00 | திருப்பலி ஆங்கிலம்<br>இடைவிடா சகாய மாதா நவநாள் இறைவேண்டல்<br>திருப்பலி ஆங்கிலம்<br>திருப்பலி யூ. பி.எம் செர்டாங் | வார நாட்கள் |
| *11/10/2026* **(ஞாயிறு)** | **காலை 7.00**<br>காலை 9.30<br>காலை 11.30<br>பிற்பகல் 1.30 | **திருப்பலி தமிழ்**<br>திருப்பலி ஆங்கிலம்<br>திருப்பலி சீனம்<br>திருப்பலி மலாய் | பொதுக்காலம் 28 ஆம் வாரம் ஞாயிறு |

***உலக மனநல தினம் 2026***

*"பராமரிப்பாளர்களைப் பராமரிப்போம்"*

*(Care for Caregivers)*

திருமறைமாவட்ட மனநல அமைச்சகம் (AMHM) ஆண்டுதோறும் நடத்தி வரும் உலக மனநல தின நிகழ்வு இவ்வாண்டும் நடைபெற உள்ளது. இவ்வாண்டு நிகழ்வை *Malaysia Mind-Body Medical Practitioners Association (MBMPA)* உடன் இணைந்து, "பராமரிப்பாளர்களைப் பராமரிப்போம்" (Care for Caregivers) என்ற கருப்பொருளில் நடத்துகின்றோம்.

இவ்வாண்டின் கவனம், பல நேரங்களில் கவனிக்கப்படாமல் போகும் பராமரிப்பாளர்களின் மனநலம் மற்றும் நலவாழ்வின் தேவைகள் மீது செலுத்தப்படுகிறது.

பராமரிப்பாளர் என்பது தொழில்முறையாக பிறரைப் பராமரிப்பவர்களை மட்டும் குறிக்கவில்லை. தமது அன்புக்குரிய ஒருவரை அக்கறையுடன் கவனித்துக் கொள்பவர்களும் பராமரிப்பாளர்களே. அவர்கள்:

- தாய் அல்லது தந்தையாக இருக்கலாம்;
- தமது பெற்றோரைக் கவனித்துக் கொள்ளும் மகன் அல்லது மகளாக இருக்கலாம்;
- கணவன் அல்லது மனைவியாக இருக்கலாம்;
- பாதுகாவலராக இருக்கலாம்;
- அல்லது அன்புக்குரிய ஒருவருக்குத் தொடர்ந்து ஆதரவாக இருப்பவராக இருக்கலாம்.




தங்கள் அன்புக்குரியவர்களைப் பராமரிக்கும் பொறுப்புகளுக்குப் பின்னால், ஒவ்வொரு பராமரிப்பாளரும் பல்வேறு மன அழுத்தங்கள், சவால்கள் மற்றும் உணர்வுப் போராட்டங்களை எதிர்கொள்கின்றனர். ஆனால், இத்தகைய சிரமங்கள் பல நேரங்களில் அவர்களுடைய பொறுப்புணர்வால் மறைக்கப்பட்டுவிடுகின்றன.

எனவே, இவ்வாண்டின் உலக மனநல தின நிகழ்வின் மூலம் பராமரிப்பாளர்களின் குரல்கள் செவிமடுக்கப்பட வேண்டும் என்பதையும், அவர்கள் தங்களின் அன்பும் அர்ப்பணிப்பும் நிறைந்த பராமரிப்புப் பணியைத் தொடர்ந்து மேற்கொள்ளத் தேவையான திறன்கள், அறிவு மற்றும் நடைமுறை உத்திகளை வழங்குவதையும் எமது நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

📅 நிகழ்வு விவரங்கள் :தேதி: 10 அக்டோபர் 2026 (சனிக்கிழமை) நேரம்: காலை 8.30 மணி – மாலை 4.30 மணி

இடம்: MAHSA Avenue International College /பதிவு செய்ய: https://forms.gle/fW6vo7a52wH4wZMW8

"பராமரிப்பவர்களைப் பராமரிப்பதும் அன்பின் ஒரு உங்களை அங்கே சந்திப்பதற்கு ஆவலுடன் காத்திருக்கிறோம்!

# அறிவிப்புகள் & பங்கு நிகழ்வுகள்

### சுகாதார பரிசோதனை மற்றும் தடுப்பூசி முகாம்




ஹுலு லங்காட் மாவட்ட சுகாதார அலுவலகத்தின் ஏற்பாட்டில், கீழ்க்கண்ட சுகாதார சேவைகள் வழங்கப்பட உள்ளன:
- 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட தகுதியுடைய மூத்த குடிமக்களுக்கான இன்ஃப்ளூயன்சா (Influenza) தடுப்பூசி , சுகாதாரப் பரிசோதனை
-கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் பரிசோதனை (Cervical Cancer Screening)

தேதி: 4 அக்டோபர் 2026, ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 8.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை
இடம்: தேவாலய மண்டபம் (Church Hall)
பதிவு செய்ய விரும்புவோர்:
வரும் 20 மற்றும் 27 செப்டம்பர் 2026, ஒவ்வொரு வார இறுதி திருப்பலிக்குப் பின்னரும் Book Barrow பகுதியில் பதிவு செய்து கொள்ளலாம்.
தொடர்பு நபர்: Belevendram - 012-289 7199

🙏 தகுதியுடைய அனைவரும் இந்த சுகாதார முகாமைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

### இறந்தவர்களுக்கான திருப்பலி

2 நவம்பர் 2026 அன்று, இறந்துபோன நம் அன்புக்குரியவர்களின் ஆன்மா இளைப்பாறுவதற்காக சிறப்பு திருப்பலி நிறைவேற்றப்படும். அவர்களுக்கான திருப்பலி நோக்கங்களை (Mass Intentions) பதிவு செய்வதற்காக, Book Barrow அருகில் சிறப்பு பதிவு மேசை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
பதிவு செய்யக்கூடிய நாட்கள்:

10.10.2026 – சனிக்கிழமை
11.10.2026 – ஞாயிற்றுக்கிழமை
17.10.2026 – சனிக்கிழமை
18.10.2026 – ஞாயிற்றுக்கிழமை
24.10.2026 – சனிக்கிழமை
25.10.2026 – ஞாயிற்றுக்கிழமை

இடம்: Book Barrow
நேரம்: ஒவ்வொரு வார இறுதி திருப்பலிக்கும் முன்பும் பின்பும் .

### நற்கருணை மறைப்பொருள்




ஆழமான புரிதல் – பாகம் 2 திருப்பலி பற்றிய ஆழமான புரிதல்
பேச்சாளர் : அருட்பணியாளர் போனவெஞ்சர் இராயப்பன்

இந்த ஆன்மீகப் பயிற்சியின் இரண்டாம் பகுதியில் கலந்து கொள்ள பங்கு மக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
நாள்: 10.10.2026 (சனிக்கிழமை) /நேரம்: காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை/ இடம்: Fr Henriot Room
அன்புக் காணிக்கை: ஒரு நபருக்கு RM5.00 (காலை உணவு)
பதிவு மற்றும் கூடுதல் தகவல்களுக்கு: கெத்தரின் வியோன்: 012-570 2781 / புவன் இராயப்பன்: 012-398 5544
திருப்பலியின் அர்த்தத்தையும் ஆழத்தையும் மேலும் புரிந்துகொள்ள அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகிறீர்கள்.

### ஜெபமாலை

பல்மொழிகளில் இறைவேண்டல் செய்வோம்
தேதி: 7 அக்டோபர் 2026
நேரம்: மாலை 7.30 மணி
இடம்: (Our Lady's Grotto)




ஜெபமாலையைத் தொடர்ந்து, தேவாலயத்தில் ஆங்கிலத் திருப்பலி நடைபெறும்.
முக்கிய அறிவிப்பு:
அன்றைய தினம் காலை திருப்பலி நடைபெறாது. அன்னையின் பரிந்துரையில் ஒன்றிணைந்து இறைவேண்டல் செய்வோம்..

### புனித லூயிஸ் மற்றும் செலீ மார்ட்டின் ம் வாழ்க்கைச் சிந்தனை




இன்றைய உலகிலும் குடும்ப வாழ்க்கையிலும் பல சவால்கள் நிறைந்துள்ளன. இத்தகைய சாதாரண அன்றாட வாழ்க்கையிலேயே ஒருவர் எவ்வாறு புனிதராக வாழ முடியும்? நீண்ட நேர உழைப்பு, சமயத்திற்கு எதிரான சூழல், குடும்பத்தில் ஏற்பட்ட கடுமையான நோய் போன்ற பல சவால்களை எதிர்கொண்ட போதிலும், அவர்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையின் வழியாக இறைநம்பிக்கையுடன் புனித வாழ்வு வாழ்ந்தனர்.அவர்களின் எளிமையான புனித வாழ்விலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் செய்திகளை சிந்திப்போம்.
பேச்சாளர்: அருட்தந்தை Nicholas Ho, OCD / தேதி: 11 அக்டோபர் 2026, ஞாயிற்றுக்கிழமை / நேரம்: காலை 11.00 – மதியம் 12.30
இடம்: தேவாலய மண்டபம் (Church Hall)

### பாலர்ப்பள்ளி மாணவர் பதிவு

திங்கட்கிழமை, 5 அக்டோபர் 2026 முதல் ஆரம்பமாகிறது.
நேரம்: காலை 8.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை
2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் பிறந்த குழந்தைகளுக்கான பதிவு நடைபெறும்.
பதிவு தொடங்கும் நாள்:
5.10.2026 – திங்கட்கிழமை

**உங்கள் காணிக்கைகளுக்கு மனமார்ந்த நன்றி**

**வார இறுதி காணிக்கை *26/9 & 27/9* : *RM13,313.00* / *Caritas Collection RM 11,125.00***

### VERBUM DOMINI – இறைவார்த்தை

திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் எழுதிய Verbum Domini – இறைவார்த்தை என்ற முக்கியமான திருஅவை ஆவணத்தைப் பற்றி அறிந்துகொள்ளும் சிறப்பான நம்பிக்கை உருவாக்கப் பகிர்வு நிகழ்வில் கலந்து கொள்ள உங்களை அன்புடன் அழைக்கிறோம். அருள்பணி மைக்கேல் சுவா (Fr. Michael Chua) அவர்கள், இறைவார்த்தையை மையமாகக் கொண்டு இந்த சிறப்புப் பகிர்வை வழங்குகிறார்.திருஅவையின் மிகச் சிறந்த சிந்தனையாளர்களில் ஒருவரான திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் அவர்களின் இந்த ஆவணம், பின்வரும் முக்கிய அம்சங்களை எடுத்துரைக்கிறது:

- திருவிவிலியமும் திருஅவையின் புனித மரபும் ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாத தொடர்பைக் கொண்டிருப்பது
- திருப்பலியில் இறைவார்த்தையின் முக்கியத்துவம்
- இறைவார்த்தையை உலகிற்கு அறிவிப்பது நமது கடமை
- இறைவார்த்தையை நமது அன்றாட வாழ்வில் ஏற்றுக்கொண்டு செயல்படுத்துதல்




தேதி :24 அக்டோபர் 2026 (சனிக்கிழமை) /நேரம்:காலை 8.30 மணி – பதிவு /காலை 8.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை
இடம்: Holy Family Kajang (HFK) Hall /அன்பு காணிக்கை RM10(சிற்றுண்டி உட்பட)
பதிவு :வார இறுதி சனிக்கிழமை மாலை திருப்பலி மற்றும் ஞாயிற்றுக்கிழமை காலை திருப்பலிகளுக்குப் பிறகு பதிவு செய்யலாம்.அல்லது, போஸ்டரில் உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்து பதிவு செய்யலாம்.மேலும் தகவல்களுக்கு:
Christi Paul – 012-3260125Jordhana Joseph – 012-7726172